# கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

வழக்கு எண் OS. No. 181/2021 நாள்: 14.11.2025

**<u>7 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வா.சா – 1 கோகிலபாண்டியன் முன்னிலையானார். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>7 ஆம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, 7 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) நான் தாக்கல் செய்துள்ள வாதி தரப்பு ஆவணங்களில் பெரும்பாலனவை தகவல் அறியம் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்டவை என்றால் சரிதான். வா.சா.ஆ. 41ன் படி அமைக்கப்பட்ட குழு என்னை விசாரணைக்கு வருமாறு தகவல் எதுவும் அனுப்பினார்களா என்றால் இல்லை. அலைபேசி மூலம் 14.02.2017 ஆம் தேதி தெரிவிக்கப்பட்டது. என்ன குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை செய்யப்படுகிறது என்பதற்கு ராமலெட்சுமி, வனிதா ஆகியோர் கொடுத்த புகாரின் மீதான விசாரணை என வாய் மொழியாக 8 மற்றும் 9 ஆம் பிரதிவாதிகள் கூறினார்கள். விசாரணை குழு சமர்ப்பித்த அறிக்கை வா.சா.ஆ. 44 ஆனது 8 மற்றும் 9 பிரதிவாதிகளால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை என்றால் சரிதான். வா.சா.ஆ. 44 அறிக்கையில் 7 ஆம் பிரதிவாதி தொடர்பான விவரங்களோ குறிப்புகளோ இல்லை என்றால் சரிதான். 15.02.2017 ஆம் தேதி விசாரணை குழு அறிக்கை தொடர்பாக நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அது சமயம் விவரங்கள் எதுவும் கோரி பெறவில்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி விசாரணை

குழுவின் நடவடிக்கைகளை ரத்து செய்து இணை இயக்குனர் தலைமையில் விசாரணை நடத்த வேண்டி 06.03.2017 ஆம் தேதியன்று என்னால் மனு செய்யப்பட்டது.

2) 06.03.2017 ஆம் தேதியன்று தாக்கல் செய்த மனுவின் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதா என்றால் மனு நிராகரிக்கப்பட்டது. அதனை எதிர்த்து மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் WP(MD) . NO. 4150/2017 வழக்கு என்னால் தொடங்கப்பட்டது. நான் தாக்கல் செய்த மனுவோ அது நிராகரிக்கப்பட்ட உத்தரவையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் கொடுத்த மனு உரிய அலுவலரால் பெறப்பட்டது என்றால் சரிதான். நான் கொடுத்த மனுவில் 7 ஆம் பிரதிவாதியை பொறுத்து குற்றச்சாட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 15.02.2017 ஆம் தேதியிட்ட விசாரணை குழு அறிக்கையின் மீது மாவட்ட கல்வி அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகலும் அதற்கான எனது ஆட்சேபனையும் வா.சா.ஆ.65 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை குழு அறிக்கையில் என் மீதான குற்றச்சாட்டு நிருபணம் ஆகியள்ளது அல்லது நிருபணம் ஆகவில்லை என அறிக்கை அளிக்கப்பட வேண்டும் அதை தவிர்த்து தமது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர் என்ற காரணத்தால் விசாரணை குழு அறிக்கை திரும்ப பெறப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் விசாரணை குழு நேர்மையாக செயல்பட்டுள்ளது என தெரிவித்து எனது ஆட்சேபனை மனுவை நிராகரித்த 6 ஆம் பிரதிவாதியால் பிறப்பிக்கப்பட்ட மேற்படி முரண்பட்ட ஆணைக்கு எனது ஆட்சேபனை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

3) வா.சா.ஆ. 65 ல் நான் தெரிவித்த ஆட்சேபனை கடிதம் 27.08.2018 ஆம் தேதி அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆட்சேபனை அறிக்கையில் நான் 7 ஆம் பிரதிவாதி தொடர்பான வழக்குரையில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விசாரணை குழுவில் 7 ஆம் பிரதிவாதி ஒரு விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டது அவரது அரசு அலுவல் சார்ந்த பணி என்றால் சரிதான். விசாரணை குழுவில் 7 ஆம் பிரதிவாதி பங்கெடுக்காததற்கு அவர் உயர் அதிகாரிகளால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 7 ஆம் பிரதிவாதி ஒரு அரசு ஊழியர் என்ற நிலையில் அவர் மீது தனிப்பட்ட முறையில் நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டப்பூர்வமானது அல்ல என்றால் சரியல்ல. சட்ட விதிகளின் படி தமிழ்நாடு அரசும் இந்த வழக்கினை பொறுத்து ஒரு அத்தியாவசியமான தரப்பினர் ஆகும் என்றால் சரியல்ல. தனிநபர் குற்றத்திற்கு அரசு பொறுப்பேற்காது.இந்த வழக்கில் 7 ஆம் பிரதிவாதியை பொறுத்து நான் கோரியுள்ள பரிகாரம் காலக்கடந்தது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் கால தாமத தோஷம் எதுவும் ஏற்படவில்லை. இவ்வழக்கின் மூலம் நான் தான் 7 ஆம் பிரதிவாதிக்கு தேவையற்ற மன உளைச்சலையும் வீண் அலைக்களிப்பும் ஏற்படுத்தி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என் மீதான விசாரணை குழுவிலிருந்து 7 ஆம் பிரதிவாதியால் அவருடைய உயர் அதிகாரிக்கு கடிதம் எழுதி விசாரணைகுழுவில் இருந்து தன்னை விடுவிக்கும் படி கோரியுள்ளது சட்டபூர்வமானது என்றால் சரியல்ல. கடிதத்தின் மீது உயர் அலுவலரின் இறுதி ஆணை எதுவும் பிறப்பிக்கப்படாத நிலையில் அக்கடிதமானது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 44,65

ஆகியவற்றின் படி 7 ஆம் பிரதிவாதியின் விலகல் கடிதம் அவருடைய உயர் அதிகாரிகளால் ஏற்கப்பட்ட விவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல.

4) 7 ஆம் பிரதிவாதி மீது தனிப்பட்ட ஒரு காழ்ப்புணர்வு கொண்டு செல்லத்தகாத இந்த வழக்கினை அவர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 7 ஆம் பிரதிவாதியை பொறுத்து நான் கேட்டுள்ள பரிகரம் சட்டப்பூர்வமாகவும் தார்மிக அடிப்படையிலும் வழக்கு விவரங்களின் அடிப்படையிலும் சட்ட விதிகளின் படியும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1, 2 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

**(Sd/- C. Sankar)**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**